**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 74 of 2022** |
| Deposition of witness | : | **PW- 1** |
| Name | : | ஸ்ரீசந்தோஷ் |
| Father Name | : | ராமசாமி |
| Village. | : | |
| Taluk | : | |
| Age | : | **28** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.01.2025.*

<u>முதல் விசாரணை</u>

1. நான் கொடுமணல் வசித்து வருகிறேன். நான் ஊத்துக்குளி தாலுக்கா ஆபிஸ் எதிர்புறம் ஜெராக்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 09.06.2022 இரவு 8.00 மணியளவில் ஊத்துக்குளி தாலுக்கா ஆபிஸ் எதிர்புறம் உள்ள எனது தங்கம் ஜெராக்ஸ் கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை 6.00 மணியளவில் தங்கம் பேக்கரியிலிருந்து அருண் என்பவர் எனக்கு போன் செய்து எனது ஜெராக்ஸ் கடையின் இரும்பு கதவு திறந்திருப்பதாக தெரிவித்தார்.

2. அதனை அறிந்து நானும் எனது தந்தையும் வந்து பார்த்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. கடையினுள் இருந்து Dell CPU, Philips Monitor, Sanyo Monitor, Lenevo all in one P.C, Epson printer ஆகியவை காணாமல் போயிருந்தது. எங்கள் கடையில் கேமரா பழுதாகியிருந்ததால் அருகே வந்தனம் பேக்கரி கேமராவிலும் பார்த்தேன். ஆனால் எதுவும் தெரியாததால் 11.06.2022 தேதியன்று இரவு 8.00 மணியளவில்

ஊத்துக்குளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 12.06.2022 தேதியன்று காலை 7.00 மணியளவில் என்னை விசாரித்தார்கள்.

3. 22.06.2022 தேதியன்று என்னை காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நான் சென்று பார்த்தபோது என் கடையில் காணாமல் போன பொருட்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் இருந்தது. நான் அதனை பார்த்து உறுதிசெய்தேன். பின்னர் மனு செய்து நீதிமன்றம் மூலம் பெற்றுக்கொண்டேன். அதனை அச்சமயம் காவல் நிலையத்தில் இருந்த ஆஜர் எதிரி துரை தான் திருடியதாக போலிசார் சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பொருட்கள் தான் களவு போகப்பட்டு மீண்டும் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்ட பொருட்கள் ஆகும். **(புகைப்படங்கள் அ.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. சாட்சியிடம் எனது முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.01.22 17:16:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 74 of 2022** |
| Deposition of witness | : | **PW- 2** |
| Name | : | அஜித்குமார் |
| Father Name | : | குப்புசாமி |
| Village. | : | |
| Taluk | : | |
| Age | : | **27** |

*Accused present.*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 22.01.2025.*

<u>முதல் விசாரணை</u>

1. நான் கொடுமணலில் வசித்து வருகிறேன். நான் கட்டிங் மாஸ்டராக உள்ளேன். கடந்த 21.06.2022 தேதி இரவு 8.30 மணியளவில் நானும் செல்வமும் எலக்டீரிக்கல் வேலைக்காக மொரட்டுபாளையம் டாஸ்மார்க் பிரவு நோக்கி எனது பல்சர் வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். மொரட்டுபாளையம் டாஸ்மார்க் பிரிவு அருகே ஊத்துக்குளி காவல் உதவி ஆய்வாளர் வெள்ளை நிற காரை நிறுத்தி விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது நாங்கள் சென்று பார்த்தோம். அங்கு ஆஜர் எதிரி துரையும் இருந்தார். அவரை போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். விசாரித்தபோது ஆஜர் எதிரி தங்கம் ஜெராக்ஸ் கடையில் இருந்து Monitor, Printer, CPU முதலியவற்றை திருடியதாக சொன்னார் அவற்றை கார் டிக்கில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதனையும் காரையும் காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். நாங்கள் போலிசார் கேட்டதின் பேரில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும்

கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 புகைப்படங்களில் உள்ள பொருட்களை தான் போலிசார் கைப்பற்றினார்கள். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரி தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. சாட்சியிடம் எனது முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.01.22 17:19:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.